**வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல கம்பனியின் 2022 ஏப்ரல் 01 திகதி முதல் 2023 மார்ச் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல கம்பனியின் (''கம்பனி'') 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு அலுவல்கள் மீதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2010/2011 ஆண்டு முதல் 2022/2023 வரையான நிதிக் கூற்றுக்கள் 2023 நவம்பர் 30 திகதி அளவிலும் சமர்ப்பித்திருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதும் கம்பனியின் செயலாற்றுகை தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் மீதான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தினாலும் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காட்டக் கூடியவாறான காலப் பகுதியினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய நேரித்தினுள் தயாரிக்க நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.6 இன் பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்று மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியினால் 2010/2011 ஆண்டு முதல் 2022/2023 ஆண்டு வரை தொடர்ச்சியாக 13 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை இந்த அறிக்கை திகதி அளவிலும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள்

2010 மார்ச் 31 திகதியில் முடிவடைந்த 2009/2010 கணக்கு ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | பெறுமதி |
|---|---|
| <u>சொத்துக்கள்</u> | ரூபா. |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 25,872,950 |
| நடைமுறை சொத்துக்கள் | 249,749,110 |
| மொத்தச் சொத்துக்கள் | 275,622,060 |
| <u>பொறுப்புக்கள்</u> | |
| நடைமுறை பொறுப்புக்கள் | 600,227,603 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 42,756,078 |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | (367,361,621) |
| மொத்த பொறுப்புக்கள் மற்றும் மூலதனம் | 275,622,060 |
| | |
| மொத்த இலாபம் | 41,985,160 |
| ஏனைய வருமானங்கள் | 135,085,512 |
| மொத்தச் செலவுகள் | 96,858,843 |
| ஆண்டிற்கான பற்றாக்குறை | 80,211,829 |

2010 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு கம்பனியில் காணப்பட்ட மொத்த சொத்துக்களைப் போல மூன்று மடங்கை விட கூடிய எண்ணிக்கையான பொறுப்புக்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நடைமுறை சொத்துக்களை மிகைத்து நடைமுறைப் பொறுப்புக்களின் அளவு ரூபா 350,478,493 ஆக இருந்ததுடன் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2 கம்பனியின் தொடர்ந்தியங்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் இறுதியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2010 மார்ச் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் ரூபா 80,211,829 தொகையாக இருந்தது. அதற்கு நேரொத்த 2009 மார்ச் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நட்டம் ரூபா 72,829,342 தொகையாக இருந்தது.<br><br>2023 ஆண்டளவில் ஜாவத்தை மற்றும் நுகேகொடை தவிர இலங்கை பூராகவுமுள்ள ஏனைய அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்ததுடன், இயந்திரப் பொறிகள் பயன்படுத்தப்படாமல் இருந்தது. இறுதியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2010 மார்ச் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொழிற்படு மூலதனம் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தொழிற்படு மூலதனத்தை மூகாமைத்துவம் செய்ய வேண்டும். |

ரூபா 350,478,493 இற்கான மறைப் பெறுமதியொன்று காணப்பட்டது. 2023 மார்ச் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது தலைவர் தவிர நிரந்தர ஊழியர்கள் 09 பேர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தனர் என அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பதவியணிக்கு மேலதிகமாக நாளாந்த அடிப்படையில் 10 உம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 05 பேரும் சேர்க்கப்பட்டிருந்தது. மேலும் கம்பனிச் சட்டத்தின் 220 பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையால் கம்பனியின் இருப்பை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் | | | |
| | (i) பிரிவு 131(1) | அனைத்துக் கம்பனிகளும் வருடாந்த அறிக்கையொன்று (படிவ இலக்கம் 15) கம்பனிப் பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கைகள் ஒப்படைத்தல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் சட்ட ஏற்பாட்டிற்கு ஒத்ததாக இருக்க வேண்டும். |
| | (ii) பிரிவு 170(1) | கணக்காய்வு அறிக்கையுடன் நிதிக் கூற்றுக்கள் கம்பனிப் பதிவாளருக்கு பதிவு செய்வதற்காக வருடாந்தம் ஒப்படைத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் பிரிவு 21 | முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கம்பனி அறவிடப்பட வேண்டிய வரித் தொகை மற்றும் மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 1,788,996 இற்கான வரித்தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அறவிடப்பட்ட வரித்தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தாமதம் இன்றி அனுப்பப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவுகள் 16 மற்றும் 27 | 2019 ஆண்டு முதல் 2021 வரையான காலப் பகுதி தொடர்பாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை தொடர்ந்து வரும் மாதாத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் அனுப்பப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 118,409 இற்கான தண்டப்பணம் மீளாய்வாண்டின் போது செலுத்துவதற்கான நேரிட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 ஜனவரி 25 திகதிய 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 3.4.1 மற்றும் 2020 மார்ச் 25 திகதிய 35 ஆம் இலக்கம் கொண்ட பெறுகை பின்னிணைப்பு | சந்தை நிர்ணயிக்கும் முறையின் கீழ் (Shopping) இலங்கை டெலிகொம் மஞ்சல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து முத்திரையிடப்பட்ட 05 கூறுவிலைகள் நியம படிவத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், நிறுவனங்களில் இருந்து திறந்த கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளல் மற்றும் அங்கீகரிக்கக்கூடிய ரூபா 10 மில்லியனிற்கான செலவு வரையறையை மிகைத்து ரூபா 11.536 மில்லியனிற்கான கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை டெலிகொம் மஞ்சல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து முத்திரையிடப்பட்ட 05 கூறுவிலைகள் நியம படிவத்தில் பெற்றுக்கொண்டு மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2013 செப்தம்பர் 11 திகதிய 02/2013 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 3.5 | பணிக்கொடை பெற்றுக்கொள்வதற்கு தமைமையுடைய ஊழியர்கள் தொடர்பாக பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையால் ரூபா 153,036 இற்கான மிகை விதிப்பொன்று செலுத்த நேரிட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தாமதமின்றி பணிக்கொடைக் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கைநூல் (Operational manual for State owned Enterprises) இன் பந்தி 6.7 | வருடாந்த சொத்துக்கள் மெய்மையாதல் மேற்கொண்டிருக்காததுடன், ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய பொருட்பதிவேட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வருடாந்த சொத்துக்கள் மெய்மையாதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் | | | |
| | பகுதி I பந்தி 9.1(ஆ) | ஏதேனும் விஷேட கருமம் ஒன்றிற்காக பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு உச்ச அளவு ரூபா 100,000 வரை நிமித்தத் துணைக் கட்டுநிதி வழங்கக்கூடியதாக இருந்த போதிலும் அதனை பெற்றுக்கொண்ட பதவி நிலை உத்தியோகத்தர் கருமம் முடிவடைந்தவுடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 7 வருடங்களுக்கு முன்னர் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 20,000 இற்கான துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்காததுடன், மேலும் 12 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர் இருவருக்கு கூட்டுத்தொகை ரூபா 92,465 இற்கான நிமித்தத் துணைக் கட்டுநிதி பெற்றுக்கொண்ட பின்னர் குறிப்பிட்ட கருமத்தை மேற்கொள்ளாமல் 4 மாதங்கள் முதல் 8 மாதங்களுக்கு இடைப்பட்ட கால வீச்சில் வைத்திருந்து மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிமித்தத் துணைக் கட்டுநிதி பெற்றுக்கொண்ட கருமம் முடிவடைந்தவுடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மார்ச் 31 திகதியிலுள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றின் படி காசேட்டின் ரூபா 11,167,854 இற்கான மீதியொன்று காணப்பட்ட போதிலும், 2022 ஏப்ரல் 01 திகதியில் உள்ளவாறு ஆரம்ப மீதி ரூபா 11,662,045 தொகையென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆரம்ப மீதி ரூபா 494,191 தொகையினால் வித்தியாசமடைந்து இருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | முன்னைய ஆண்டின் இறுதி மீதிகள் சரியாக அடுத்த ஆண்டின் ஆரம்ப மீதியென முன்கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மூன்று வங்கிக் கணக்குகளில் 31 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 4,069,567 இற்கான வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யாமல் காசேட்டில் ‘‘வைப்புக்கள் பெறல்’’ என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி, வங்கி இணக்கக் கூற்றுகள் தயாரிக்கும் போது ‘‘வங்கிக்கு செலவு வைக்கப்பட்டிருந்த ஆனால் இனங்காணப்படாத பெறுவனவுகள்’’ காணப்படவில்லை என சுட்டிக்காட்டியிருந்ததுடன், வைப்புக்கள் பெறுவனவுக் கணக்கில் காணப்படும் மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வங்கிக்கு செலவு வைக்கப்பட்ட ‘‘இனங்காணப்படாத பெறுவனவுகள்’’ இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல்வேறு உத்தியோகத்தர்களுக்கு துணைக் கட்டுநிதிகள் செலுத்தும் போது விண்ணப்பம் ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், கொடுப்பனவு ஒன்றென குறிப்பிடாமல் பணம் செலுத்தப்பட்டதற்கான சாட்சி என காசாளரிடம் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இந்த நிமித்தத் துணைக் கட்டுநிதிகளின் கூட்டுத்தொகை கையில் காசின் ஒரு பகுதி என கணிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிமித்தத் துணைக் கட்டுநிதி கொடுப்பனவு என குறிப்பிடப்பட வேண்டியதுடன், செலுத்திய மொத்தத் தொகை கையில் காசின் ஒரு பகுதி என காட்டப்படக்கூடாது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் உழைத்த வருமானத்தில் 89 சதவீதம் தொகை அரச நிறுவனங்களுக்கு இலாப எல்லையொன்று சேர்த்து பண்டங்கள் வழங்குவதன் மூலம் பெறப்பட்ட இலாப நிலைமையொன்றாக காணப்பட்டதுடன், அந்த இலாப எல்லை 30 சதவீதத்திலிருந்து 444 தசவீதம் வரை வீச்சொன்றினை பெற்றிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இடைத் தரகர் என்ற முறையில் செயற்படும் போது கூடிய இலாப எல்லையொன்று சேரந்து அரச நிறுவனங்களுக்கு பண்டங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது. |
| (ஆ) | அதிரடிப் படையில் 2021 ஜனவரி 06 திகதிய பெறுகை வழங்கல் கடிதத்தின் பிரகாரம் 6000 வெள்ளை பனியன்கள் 90 நாட்களில் வழங்க வேண்டியிருந்த போதிலும், பெற்றுக்கொண்டு 9 மாதங்கள் கால தாமதத்தின் பின்னரும் 4,048 பனியன்கள் வழங்குவதற்கு முடியாமல் இருந்தமையால் ரூபா 647,680 இற்கான வருமானம் ஒன்றினை இழந்திருந்ததுடன், வழங்கியிருந்த 1952 பனியன்கள் தொடர்பாக ரூபா 29,280 இற்கான இலாபமொன்றினை உழைப்பதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் தாமதக் கட்டணம் என ரூபா 64,786 தொகை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தமையால் அந்த விற்பனையின் மூலம் ரூபா 35,506 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அதேபோல் அந்த வழங்கல் தொடர்பாக 2022 திசெம்பர் 09 திகதி கிடைத்திருந்த ரூபா 272,537 இற்கான தொகையினை இனங்கண்டு கணக்கீடு செய்தலும் மேற்கொண்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கால தாமதமின்றி வழங்குதல் மற்றும் வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் மேற்கொள்ள வேண்டும். |
| **(இ)** | **விற்பனவு அல்லது திருப்பியனுப்புதல் அடிப்படையின் மீது பெற்றுக்கொள்ளப்பட்ட புடவைகள்** | | |
| (i) | புடவைகள் பெற்றுக்கொள்ளும் போது நியாயமான, சமமான மற்றும் உச்ச மட்ட சந்தர்ப்பமொன்றினை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கு பதிலாக தெரிவு செய்யப்பட்ட இடைத் தரகர்களிடம் புடவைகள் பெற்றுக்கொண்டிருந்த காரணத்தினால் கொள்வனவு விலை அதிகரித்தல் அதற்கு 30 சதவீத இலாப எல்லையொன்றுடன் விற்பனை விலையை | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நியாயமான, சமமான மற்றும் உச்ச மட்ட சந்தர்ப்பமொன்றினை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானித்திருந்த காரணத்தினால் கம்பனியின் புடவைகளின் விலை சந்தை விலைக்கு நேரொப்ப அதிகரித்திருந்தது. | | |
| (ii) | புடவைகளை கம்பனியில் தடுத்து வைக்கும் காலம், விற்பனை செய்யப்பட்ட புடவைகளுக்காக பணம் செலுத்துதல், விற்பனை செய்யப்படாத புடவைகள் திருப்பியனுப்புதல் ஆகியவை தொடர்பாக வழங்குனருடன் சட்டரீதியான இணக்கப்பாடொன்றுக்கு வந்திருக்கவில்லை. இதன் காரணமாக 2023 ஜூலை மாதம் 20 திகதி அளவில் அந்த அடிப்படையின் கீழ் பெற்றுக்கொண்டிருந்த புடவைகள் 03 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரையான காலப் பகுதியொன்றில் விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் விற்பனை செய்யப்படாத ரூபா 2,261,653 இற்கான பெறுமதியுடைய இருப்பு காணப்பட்டது. அதேபோல் அந்த இருப்பினை திருப்ப வழங்குனருக்கு ஒப்படைக்கும் போது சலுசல பேருடனான லேபல் அகற்றப்படாமல் ஒப்படைக்கப்பட்டுள்ளதென 2023 ஜூலை 20 திகதி பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | புடவைகளை தடுத்து வைத்தல், பணம் செலுத்துதல் மற்றும் விற்பனை செய்யப்படாத இருப்பினை திருப்பியனுப்புதல் சட்டரீதியான இணக்கப்பாடொன்றுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், இருப்பினை திருப்ப வழங்குனருக்கு ஒப்படைக்கும் போது சலுசல பேருடனான லேபலை அகற்றுதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | புடவைகளை விற்பனை செய்த பின்னர் பணம் செலுத்துதல், கம்பனியின் கொள்கையாக இருந்த போதிலும், மாதிரிப் பரிசோதனையின் போது அந்தக் கொள்கைக்கு புரம்பாக ஒரு வழங்குனரின் விற்பனை செய்யப்படாத 55 விடயங்கள் தொடர்பாக ரூபா 191,300 தொகையும் வேறொறு வழங்குனரின் 10 விடயங்கள் தொடர்பாக ரூபா 6,700 தொகையுமாக ஜாவத்தை விற்பனை நிலையத்தில் காணப்பட்ட இருப்பிற்காக பணம் செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல் 2023 ஜூலை 14 திகதியில் உள்ளவாறு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் பணம் செலுத்தப்பட்டிருக்காத ரூபா 789,060 இற்கான கடன் கொடுத்தோர் மீதியொன்றும் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட புடவைகளுக்கான பணம் செலுத்துவது தொடர்பாக கம்பனியின் கொள்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | முல்லேரியாவில் அமைந்துள்ள கட்டிடத்துற்காக அரச பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளாமல் 2022 ஒக்தோபர் 14 மற்றும் 24 திகதிய 05 வருட காலத்திற்காக இரண்டு தனியார் கம்பனிகளுக்கு வாடகைக்கு | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அரச ஆதனங்கள் தொடர்பாக பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளல், உடன்படிக்கைக்கு அணுக முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு கம்பனியின் நிறுவுதல் 2022 ஒக்தோபர் 17 திகதி அதாவது உடன்படிக்கைத் தினத்திற்கு பின்னர் ஏற்பட்டிருந்தமையால் இந்த உடன்படிக்கையின் செல்லுபடியாகும் தன்மை ஒன்று தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கல் தன்மை காணப்பட்டது. | | நிறுவனங்களின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | தலங்கமையில் அமைந்துள்ள மின்தரி நெசவுத் தொழிற்சாலைக் கட்டிடம் 10 வருட காலத்திற்காக மேற்கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கை 2016 ஜூன் 07 திகதி முடிவடைந்திருந்ததுடன், கணக்காய்வுத் திகதியளவில் 7 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணியுடனான கட்டிடம் உடன்படிக்கையொன்றின்றி குத்தகையாளரினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கம்பனி குத்தகைப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்காமையால் நிலுவை குத்தகை தொடர்பாக உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது ரூபா 2,768,620 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகை எந்த காலப் பகுதிகளுக்கு உரியது எனவும் மற்றும் நிலுவைக் குத்தகைத் தொகை எவ்வளவு என கண்டறியப்படவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | குத்தகைக் காலம் முடிவடையும் போது புதிய குத்தகை உடன்படிக்கைக்கு அணுகுதலும், பதிவேடுகள் உரிய முறையில் பேணி நிலுவை குத்தகையை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி ஆணையாளரினால் பிக்கு ஒருவரின் பேரில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கொத்தடுவையில் அமைந்துள்ள 01 ரூட் 18 பர்சஸ் காணிப்பகுதி 1975 ஜனவரி 01 திகதி முதல் 50 வருட காலத்திற்காக கம்பனிக்கு துணைக் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. உரிமையினை உரித்தாக்காமல் அந்தக் காணியில் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக கம்பனி செலவு செய்திருந்ததுடன், அது தொடர்பாக ஆவணங்கள் காணப்படவில்லை. அதேபோல் 2008 ஒக்தோபர் 13 திகதி முதல் 2021 ஒக்தோபர் 21 திகதி வரையான கால எல்லைக்கான காணி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி கம்பனியினால் இலக்கம் 190 கொண்ட குத்தகை உடன்படிக்கையின் மூலம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு துணைக் குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனம் கம்பனிக்கு அல்லது காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு குத்தகை | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | உரிமையை உரித்தாக்காமல் காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் காணி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி குத்தகைக் காணிகளை துணைக் குத்தகைக்கு வழங்கக் கூடாது அதே போல் மூலதனச் செலவு ஆவணங்கள் உரிய முறையில் பேணிச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தாமல் 2011 ஆண்டு மார்ச் முதல் அந்த ஆதனங்களை பயன்படுத்தி வருகின்றது. | | |
| (எ) | அம்பாறையில் அமைந்துள்ள கட்டிடம் 2023 பெப்ரவரி 16 திகதி முதல் 2033 பெப்ரவரி 15 திகதி வரையான காலப் பகுதிக்காக மாதாந்தம் ரூபா 60,000 வீதம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | குத்தகைக்கு கொடுப்பதற்கு முன்னர் ஆதனங்கள் தொடர்பாக பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஏ) | 2022/23 காலப் பகுதிக்குரிய கடன்பட்டோர் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கடன்பட்டோர் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (ஐ) | 2011 ஆண்டில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஜாவத்தை வளாகத்தில் உள்ள கட்டிடம் ஒன்று ரூபா 11.2 மில்லியன் தொகைக்கு குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக இணங்கியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமையால் அந்த நிறுவனம் கம்பனிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வெளித் தரப்பினருடன் ஏற்படுத்திக்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்படுவதற்காக பொறுப்பாக இருக்க வேண்டும். |

**3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரை ரூபா 10 மில்லியன் முதல் ரூபா 17 மில்லியன் வரையான தொகையொன்று நடைமுறைக் கணக்குகளில் மீதிகள் என காணப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் சந்தையில் முதலீட்டின் மீது 15 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையான உயர்ந்த வட்டி விகிதம் ஒன்று காணப்பட்ட போதிலும் அந்த மிகைப் பணத்தினை முதலீடு செய்து நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று தடுத்து வைத்திருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நடைமுறைக் கணக்குகளில் காணப்படும் மீதிகளை விளைவற்று தடுத்து வைக்காமல் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆண்டின் போது சாட்டுதல் கடிதம் ஒன்றின் மூலம் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த கோனுல்லவில் அமைந்துள்ள 3 கட்டிடங்களுடனான 31.4 பர்சஸ் காணி மற்றும் 2012 ஆண்டின் போது குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்த மகவெலி அதிகார சபைக்கு சொந்தமான இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றுடனான அங்குனுகொல பெலஸ்ஸவில் அமைந்துள்ள 01 ரூட் அளவான காணி சட்டரீதியாக கம்பனிக்கு உரித்தாக்கியிருக்காததுடன், அவை கணக்காய்வுத் திகதி அளவிலும் விளைவற்று காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் ஆக்கபூர்வமான ஈடுபடுத்துவதற்கும் அவற்றை சட்டரீதியாக கம்பனிக்கு உரித்தாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வீரவில 03 ரூட் 18.68 பர்சஸ் காணி 2018 ஆண்டு முதல் கம்பனிக்காக ஒதுக்கப்பட்டுள்ளதென தெபரவெவ பிரதிக் காணி ஆணையாளர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | காணியை உரித்தாக்கல் மற்றும் ஆக்கபூர்வமான ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கழுத்துறை – பேருவளையில் அமைந்துள்ள கட்டிடத்துடனான 01 ரூட் 16 பர்சஸ் காணியும், உனவடுனையில் அமைந்துள்ள கைப்பணிச் சபைக்கு உரித்தாக்குவதற்கு தீர்மானித்திருந்த 01 ஏக்கர் 30.6 பர்சஸ் கம்பனிக்கு சொந்தமான ஆதனங்கள் கணக்காய்வுத் திகதி அளவிலும் விளைவற்று காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (உ) | கலகெதரையில் அமைந்துள்ள 01 ஏக்கர் 01 ரூட் 39.5 பர்சஸைக் கொண்ட 03 கட்டிடங்களுடனான உற்பத்தி நிறுவனம் மற்றும் அவற்றில் காணப்பட்ட பண்டங்களுடன் மத்திய மாகாண சபையின் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு உற்பத்தி அலுவல்களை நடாத்திச் செல்வதற்காகவும், அந்த உற்பத்தியில் பகுதி ஒன்று கம்பனிக்கு வழங்குவதற்காகவும் 2022 திசெம்பர் மாதம் உடன்படிக்கை | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | உடன்பட்ட இணக்கப்பாட்டின் படி அலுவல்களை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தற்போதும் அவ்வாறு இணங்கியிருந்த உற்பத்தியின் ஒரு பகுதி கம்பனிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது ரூபா 194,410 தொகை செலவிடப்பட்டு 20 தையல் இயந்திரங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த இயந்திரங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், மேலும் 54 தையல் இயந்திரங்கள் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |